Bodhi International Journal of
Research in Humanities, Arts and Science

Vol. 10 Special Issue 3 January 2026
E-ISSN: 2456-5571

# சமுதாயவியல் அணுகுமுறையில்கள்

**முனைவர் கு.சக்திலீலா**
உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

Open Access

Manuscript ID:
BIJ-SPL3-JAN26-MD-046

Subject: English

Received : 02.09.2025
Accepted : 14.10.2025
Published : 31.01.2026

DOI: 10.64938/bijsi.v10si3.26.Jan046

Copy Right:

This work is licensed under
a Creative Commons Attribution-
ShareAlike 4.0 International License.

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கியங்களில் கள்ளைக் குறிப்பதாக, 'அரியல், பிழியில், கள், தேறல், நறவு மற்றும் மது' போன்ற சொற்களைக் காணப்படுகின்றன. 'கள்'வீரவூழிக் காலச் சமூகத்தின் பெற்றிருந்த மதிப்பினைச் சங்கப்பாடல்கள் வழி அறிமுடிகிறது. வீரர்களுக்கும் இரவலர்களக்கும் வழங்கப்படும் முதன்மை பானமாக 'கள்' இருந்தது. இனக்குழு சமுதாயத்தின் அடையாளமாக இருந்த, 'கள்' மன்னர்களின் வள்ளல் தன்மைக்கும் வீரர்களின் வீரத்திற்கும் ஊரின் வளத்திற்கும் குறியீடாக பாடல்களில் புலவர்களால் கையாளப்பெற்றுள்ளது என்பதை சமுதாயவியல் அணுகுமுறையின் வழி கண்டறிய முடிகிறது.*

***திறவுச் சொற்கள்: கள், வீரவூழிக்காலம், இனக்குழு, குறியீடு***

இலக்கியம் சமூகம் சார்ந்த நிகழ்வுகளைப் பதிவு செய்து ஆவணப்படுத்தும் பணியைச் செய்து வருகிறது அதனால் தான் பழந்தமிழர்கள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த முறைமைகளை இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது. அதில் கள்ளைக் குறிக்கும் சொற்கள் சொற்களாக, 'அரியல், பிழியில், கள், தேறல், நறவு மற்றும் மது' போன்ற சொற்களைக் காணப்படுகின்றன. ஒரு பொருள் குறித்து பல சொற்கள் புழக்கத்தில் இருத்தல் அச்சமூகம் சார்ந்த அப்பொருளின் பயன்பாட்டைத் தெரிவிக்கிறது. கள்ளைக் குறிக்கும் சொற்களாக அவை தயாரிக்கப்படும் விதத்தை வைத்து பல பெயர்களில் அழைக்கப்படும் முறைமையும் அகப்புற இலக்கியங்களில் உவமைக்காகவும் வருணனையாகவும் அவற்றின் சுவை இயம்பப்படுவதன் வழி வீரயுக சமூகத்தில் கள் பெற்று இருந்த இடத்தை புலப்படுகிறது. அந்தவகையில், 'கள்' என்ற பானம் சங்க சமுதாயத்தில் இருந்த நிலைபாடுகளைச் சமுதாயவியல் அணுகுமுறையில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**சமுதாயவியல் அணுகுமுறை**

ஏழு விதமான படிநிலைகளில் இலக்கியங்களில் சமுதாயவியல் அணுகுமுறை ஆராயப்படுகிறது. "சமுதாய பின்னணி, எதிர்கோள் அல்லது ஏற்பு, சமுதாய சித்தரிப்பு, சமுதாய மதிப்புகள், சமுதாய சிக்கல்கள், சமுதாய மாற்றங்கள் என்பனவற்றை சமுதாயவியலின் படிநிலைகள்"1 என தி.சு.நடராஜன் குறிப்பிடுகின்றார். இந்தப் படிநிலைகளை அடிப்படையாக வைத்து 'கள்' பற்றி சமுதாயவியல் அணுகுமுறை ஆராய்ந்தால், சமுதாயத்தில் கள் பெறும் மதிப்பினையும், கள் வழி சமுதாயம் சித்தரிக்கும் முறையையும் காணமுடிகிறது.

இச்சமூகவியல் அணுகுமுறையை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது

**கையறுநிலையில் கள்**

மன்னனை இழந்த இரவலர்கள் பாடும் கையறுநிலை பாடல்களில் அவன் வழங்கும் 'கள்' சிறப்பிடம் பெறுகிறது. சேரமான் பெருஞ்சேரலாதனின் சுற்றத்தார் அவன் இறந்தமையால் கள் உண்ணாது வருந்துவர் என்பதை, "சுரும்பு ஆர்தேறல் சுற்றம் மறப்ப" (புறம்.69:1) கழாத்தலையார் குறிப்பிடுகின்றார். வேள்பாரி தன் குடிதோறும் உள்ள மக்களுக்கு நிலத்தில் புதைக்கப்பட்ட முற்றிய கள்ளினைக் கொடுப்பான். அவன் இறந்ததால் இனி அவர்களுக்கு கொடுப்பார் இல்லை என்பதை கபிலர்,

**"நிலம்புதைப் பழுனிய மட்டின் தேறல்**
**புல்வேய்க் கரம்பைக் குடிதோறும் பகர்ந்து"**

**(புறம்.120:11-12)**

என்ற பாடலடிகளில் இயம்புதலைக் காணமுடிகின்றது. அதியமானை இழந்த ஔவையார்,

**"சிறுகட் பெறினே எமக்கு ஈயுமன்னே**
**பெரியகட் பெறினே**
**யாம்பாட தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே**
**சிறுசோற்றானும் நனிபல கலத்தன் மன்னே**
**பெருஞ்சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே"**

**(புறம்.235:1-5)**

என அதியமானின் விருந்தோம்பல் பண்பையும் கள்ளைப் பகிர்ந்தளிக்கும் இயல்பையும் இணைத்துக் குறிப்பிடுகிறார். மேலும்,

**"இல்லாகியரோ காலை மாலை**
**அல்லாகியர் யான் வாழும் நாளே**
**நடுகல் பீலி சூட்டி நார்அரி**
**சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ**
**கோடு உயர் பிறங்குமலைக் கொழீஇய**
**நாடு உடன் கொடுப்பவும் கொள்ளாதோனே"**

**(புறநா.232)**

என்ற பாடலில் அதியமான் தன் நாட்டையே மக்களுக்காக கொடுத்தவன். அப்படிப்பட்டவன் தன் நடுகல்லுக்கு வைப்பட்டிருக்கும் சிறுக்கலத்தின் கள்ளினை ஏற்கமாட்டான். கள்ளினைக் கொடுக்கும் இயல்பினை உடையவன் அவன் எடுத்துக்கொள்ளமாட்டான் என அவனின் கள் வழங்கும் முறையினை வெளிப்படுத்துகிறார். 'கள்' வெறும் பானமாக மட்டுமின்றி மன்னனின் அடையாளமாக அவன் குடிகாக்கும் சிறப்போடு தொடர்புடையதாக விளங்கியமை புலனாகிறது.

**விருந்தோம்பலில் கள்**

ஆற்றுப்படை இலக்கியங்களில் பரிசில் பெறச் செல்லும் இரவலர்கள் வழியில் பெறும் கள்ளினைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. தொண்டைமான் இளந்திரையினிடம் பரிசில் பெறச்சொல்லும் பெரும்பாணன், 'நீர்ப்பெயல்' என்னும் பட்டினத்தில் ஆண்பன்றியின் இறைச்சியோடு நறவினையும் கள்ளினையும் பெறுவர் (பெரும்.345) என்கிறார் கடியலூர் உருத்திரங்கண்ணனார். நல்லியக்கோடனை காணச்செல்லும் சிறுபாணனுக்கு, எயிற்பட்டினத்தில் நுளைச்சியர் அரித்த தேறலைப் பரதவர் வாயில் ஊட்டுவர் எனச் சிறுபாணாற்றுப்படை (158 - 159) குறிப்பிடுகிறது. நன்னனைக் காணச்செல்லும் கூத்தர், பழையர் மகளிர் மிடாவில் உண்டாக்கிய தேறலைப் பெறுவதை மலைபடுகடாம் (463) சுட்டுகிறது. வழிப்போக்கர் வழி நடந்து வந்த களைப்பைப் போக்க உதவும் முக்கிய பானமாக கள் இருந்தமை வெளிப்படுகிறது.

ஆநிரையின் மீட்கும் வீரன் (புறம்.261:12), சோழன் நலங்கிள்ளி (புறம்.40:14), களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் (பதி.40:19) பிட்டங்கொற்றன் (புறம்.170:1-2), சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் (புறம்.397:14), சேரமான் வஞ்சன் (புறம்.398:22-25), இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் (பதி.12:18) போன்ற குறுநில வள்ளல்களும் மன்னர்களும் போர் வீரரும் தன்னை நாடி வரும் இரவலர்களுக்கு கள் அளித்தமையைப் புலவர்கள் சிறப்பித்துப் பாடியுள்ளனர். மேலும் கள் வழங்கி விருந்தினரை தாமே உடனிருந்து கவனித்து விருந்தளிக்கும் முறை பெரும் சிறப்பாக கருதினர். இதனை,

**"பாம்புவெகுண் டன்ன தேறல் நல்கி**
**.....................................................................**
**ஆனா விரும்பின் தான்நின்று ஊட்டி"**

**(சிறுபா.236 -245)**

என நல்லியக்கோடனின் விருந்தோம்பலைச் சிறப்பிக்கும் நல்லூர் நத்தத்தனாரின் பாடலடிகளால் அறியமுடிகிறது.

**"கொட்டைக் கரைய பட்டுடை நல்கி**
**பெறல் அருங்கலத்தில் பெட்டாங்குஉண்க என்ப**
**பூக்கமழ் தேறல்வாக்குபு தரத்தர**
**வைகல் வைகல் கைகவி பருகி"**

**(பொருந.155-158)**

என்ற பாடலடிகளில் கரிகாற் பெருவளத்தான் பொற்கலத்தில் தேறலை நாள்தோறும், 'உண்ணுங்கள் உண்ணுங்கள்' என உண்பித்ததைமுடத்தாமக்

கண்ணியார் குறிப்பிடுகிறார். மன்னனின் விருந்தோம்பலில் கள் சிறப்பிடம் பெறுதலையும் சமூகத்தில், 'கள்' என்ற பானம் மதிப்புடையதாய் கருதபெற்றமையும் வெளிப்படுகிறது.

**வீரத்தின் குறியீடு**

'கள்' வீரத்தின் குறியீடாக கருதப்பெற்றது. ஆநிரையைக் கவர்ந்து வரும் வீரனை ஊரார் நறவினை கொடுத்து வரவேற்றலையும் (புறம்.262:1), ஆநிரை கவர்ந்து வரும் வீரனுக்காக கள் இருக்கும் கலத்தைப் பாதுகாத்து வைக்கும்படி உலோச்சனார் பாடுவதையும் (புறம்.258:9) காணமுடிகிறது.

***"இல்அடு கள்ளின் சில்குடிச் சீறூர்***
***புடைநடு கல்லின் நாட்லி ஊட்டி***
***நல்நீராட்டி நெய்ந்நறைக் கொளீஇய***
***மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்***
***அருமுனை இருக்கைத்து ஆயினும் வரிமிடற்று"***

**(புறம்.329:1-5)**

என்ற மதுரை அறுவை வணிகன் இளவட்டனார் பாடலில், 'கள் அடும் சிறுகுடி' என்று முதன்மைப்படுத்தி பின், அது பகைவர்களால் அணுகமுடியாத ஊர் இரவலர்க்கு பொருள் வழங்கும் ஊர் என்று ஊரின் வளமை எடுத்துரைக்கப்படுகிறது. கள்பானையைத் தேடும் வீரனின் செயலைப் போல தமையனைக் கொன்றவனைத் தேடும் வீரனின் செயலை அரிசில் கிழார்,

***"அகல்பெய் குன்றின் சுழலும் கண்ணன்***
***பேர்ஊர் அட்ட கள்ளிற்கு***
***ஓர்இல் கோயில் தேருமால் நின்னே"***

**(புறநா.300:4-6)**

என்ற பாடலடிகளில் காட்டியுள்ளார். மேலும், அதியமான் பகைவரை அளித்ததைச் சிறப்பிக்கும் பாடலில் ஔவையார்,

***"வேலே குறும்பு அடைந்த அரண்கடந்து அவர்***
***நறுங்கள்ளின் நாடு நைத்தலின்***
***கரை தழீஇய இருங்காழொடு***
***மடை கலங்கிநிலை திரிந்தனவே"***

**(புறநா.97:4-7)**

சிறப்பித்தலையும் காணமுடிகின்றது. ஔவையார், வீரன் ஒருவனைச் சுட்டிக்காட்டி, அவன் தந்தையின் தந்தையும், தந்தையும் மன்னனின் தந்தையின் தந்தைக்கும், அவன் தந்தைக்கும் உற்ற தோழராய் விளங்கியோர். அம்மரபில் வந்த இவனும், மன்னனைக் குறித்து ஏவப்பட்ட வேலைத் தன்மார்பில் தாங்குவான் ஆகையால் முதலில் அவனுக்குக் கள் வழங்கும்படி சொல்கிறார். 'கள்' வீரத்தை மிகுவிப்பதற்கும் குடும்பத்தின் பாரம்பரியத்திற்குக் கொடுக்கப் பெறும் மதிப்புடை பானமாக இருந்தமையை ஔவையாரின் (புறம்.390) பாடல் வெளிப்படுத்துகிறது

**வளமையின் குறியீடு**

கள் நாட்டின் வளமையின் குறியீடாக இருந்தது. மன்னனைப் புகழும் போதும் ஊரினைப் புகழும் போதும் கள்ளினைக் குறிப்பிடும் வழக்கம் இருந்தது. மதுரைக்காஞ்சி, 'கொடுக்க கொடுக்க குறையாத நறவினை உடையவன்" (மதுரை.779-781) எனத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனாரால் போற்றப்படுகிறான். சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி கொழுவிய மீனையும் கள்ளையும் உடைய நாட்டிற்கு உரியவன் (புறநா.13) எனப் புகழப்படுதலைக் காணமுடிகிறது. "இன்கடும் கள்ளின் ஆமூர்" (புறநா.80:1) என ஆமூரைச் சாத்தந்தையார் புகழுகிறார்.

நீரை போல மிகுந்த கள்ளினை உடையது முசிறிநகர் (புறநா.343:9 - 10) எனவும் பாரி மன்னனின் பறம்புமலையைப் பாடும் கபிலர், கள் மலையில் உள்ள கற்களை உருட்டி விடும் அளவிற்கு இருந்ததாக

***"ஒரு சார் அருவி ஆர்ப்ப, ஒரு சார்***
***பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்,***
***வாக்க உக்க தேக் கள் தேறல்***
***கல்அலைத்து ஒழுகும் மன்னே" (புறம் 115)***

சிறப்பித்த உரைக்கிறார்.

மன்னனை வாழ்த்தும்போது கூட புலவர்கள் கள்ளினை உண்டு மகிழ்வோடு வாழும்படி குறிப்பிடுகிறார்கள். தருமபுத்திரன் என்னும் அரசனை, 'மகளிர் சிறந்த கள்ளினைப் பொறக்கலத்தில் தர உண்டு செல்வச் செழிப்புடன் வாழ்வாயாக' என கோதமனார் வாழ்த்துகிறார் (புறம்.366). மேலும், சோழன் பெருங்கிள்ளி நடத்திய ராஜசூயை யாகத்தில் சேரமான் மாரிவெண்கோவும் பாண்டியன் கானப்போர் தந்த உக்கிரப்பெருவழுதியும் ஒருங்கே இருந்ததைக் கண்ட ஔவையார், 'மகளிர் பொற்க்கலத்தில் கொடுத்த நாரால் வடிகட்டப்பட்ட நல்ல தேறலை உண்டு விண்மீன்களும் மழைத்துளிகளும் இருக்கும் காலம் வரை வாழ்வீராக' என்று வாழ்த்துகிறார்.

***"பாசிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய***
***நார்அரி தேறல் மாந்தி மகிழ்சிறந்து***
***இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி"***

**(புறம்.367:6-8.)**

மேலும், தேர்வன் மலையன் இரவலர்களுக்குக் தன் முயற்சியால் ஈட்டிய பொருளைக் கொடுத்துவிட்டு கள் உண்ணும் செயலுக்கு நிலத்தை உழுது விளைச்சல் தர உதவிய எருது வெக்கோலை உண்ணும்செயலை ஒத்திருந்ததாகப் பாடும் பெருஞ்சித்திரனார்,

**"உழுதநோன் பகடு அழி தின்றாங்கு**
**நல்அமிழ்து ஆக நீநயந்து உண்ணும் நறவே"**

**(புறம்.125:7-8)**

என அவன் உண்ணும் கள் அமிழ்தமாகட்டும் என்று வாழ்த்துகிறார். மன்னர்களின் வளமையின் அடையாளமாகவும் கள் திகழ்ந்தமை வெளிப்படுகிறது.

**தொகுப்புரை**

மன்னனை இழந்த இரவலர்கள் கையறுநிலையில் பாடும் பாடல்களில் 'கள்' வழங்கியமை பற்றிய செய்தி எடுத்துரைக்கப்படுகிறது. மன்னன் அளிக்கும் விருந்துணவில், 'கள்' முதன்மை இடம்பெறுகிறது. அதிலும், கள்ளினை மன்னன் இருந்து இரவலர்களுக்கு அளித்தல் பெருமைக்குரியதாகக் கருதப்படுகிறது. நாட்டின் வளத்தை கூறுமிடத்தும் கள்ளோடு தொடர்புபடுத்திப் புகழுதலைக் காணமுடிகிறது. இவை அனைத்து சங்க சமூகத்தில் 'கள்' பெற்றிருந்த சமூக மதிப்பை வெளிப்படுத்தி நிற்கின்றன.

மன்னன் குடிகாக்கும் முறையைச் சிறப்பிக்கும் பொழுதும், வீரத்தின் மேன்மையை எடுத்துரைக்கும் பொழுதும் 'கள்;' இடம்பெறுதல் வீரவூழிச் சமூகத்தின் சித்தரிப்பில் கள் பெறுமிடத்தை அறியமுடிகிறது.

பாரி, அதியமான் போன்ற குறுநில வள்ளல்களைப் பற்றிய பாடல்களில் தவறாமல் 'கள்' இடம்பெறுவதன் மூலம் இனக்குழு சமுதாயத்தின் அடையாளமாக 'கள்' இருந்தமை புலனாகிறது. மேலும், அரசுடைமைச் சமூகம் வந்த பின்னும் சீறூர் மன்னர்களின் ஊரைப்பற்றி பாடும் போது 'கள்' இடம்பெறுதலும் அதனை உண்ணும் அவர்கள் பகைவர்கள் நெருங்க முடியாத வீரத்தைப் பெற்றிருத்தலும் வீரத்தின் குறியீடாக 'கள்' இருந்தமை புலப்படுத்தப்படுகிறது.

'கள்' என்பது சங்க சமூகத்தில் பருகும் பானமாக மட்டும் இல்லாமல் நாட்டின் வளம் மற்றும் வீரத்தின் குறியீடாக திகழ்ந்தமையும் இங்கு வெளிப்படுகிறது. இரவலருக்கும் வீரர்களுக்கும் கள் வழங்க பெற்றமையைக் காணமுடிகிறது இழந்த வலிமையை ஈடு செய்ய இரவலருக்கும் வலிமை உடையவர்களாகிய வீரர்கள் மிகுந்த வலிமையோடு பகைவர்களை அழிப்பதற்கும் 'கள்' இன்றியமையாத பானமாக சங்க சமூகத்தினரால் கருதப்பெற்றமையும் ஊனோடு சேர்த்து கள் உண்ணப்படுதல் இழிவானதாக கருதப்பெற்றமையும் இலக்கியச் சான்றுகளின் வழி தெளிவாகிறது.

**அடிக்குறிப்பு**

1. தி.சு.நடராசன், திறனாய்வுக் கலை, பக். 54-55.

**துணைநூல்பட்டியல்**

2. முனைவர் ஆ.செல்வராசு(உ.ஆ.), - சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு 2024.
3. முனைவர் இரா.மகிழேந்தி(உ.ஆ.) - சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் பதிற்றுப்பத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு 2024.
4. தி.சு.நடராசன் - திறனாய்வுக் கலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, நான்காம் அச்சு மே2006